Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC. 165/2018 |
| Police station | : | Cuddalore NT PS |
| Deposition of witness for Prosecution | : | L.w.4 /P.w.4 |
| Name | : | குமார் |
| Father Name/Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 29.06.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**( எதிரிஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**சாட்சி கடலூர் புதுநகர் காவல் நிலையம் தலைமை காவலர் திரு.நந்தகுரு (HC 401) என்பவரால் அடையாளம் காண்ப்பிக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்டம் செம்மண்டலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சுயதொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கை பற்றி எந்த நியாபகமும் இல்லை. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி</u>**

போலிசார் விசாரித்தார்கள் என்றும், கடந்த 15.07.2017 ம் ஆண்டு மதியம் சுமார் 02.00 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் மணிக்கூண்டு அருகே நீங்களும் உங்கள் நண்பர் செல்வராஜ் என்பவருடன் பேசிக்கொண்டு இருந்த போது கடலூர் புதுநகர் காவல் நிலைய போலிசார் குற்ற எண் 318/2017 ச/பி 457, 380 இதச என்ற வழக்கின் சம்பவ இடத்தினை பார்வையிட்டு உங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நீங்களும் செல்வராஜ் –ம் சாட்சிகளாக கையொப்பம செய்தீர்கள் என்றும், போலிசார் விசாரணையில் உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக அரசு தரப்பில் இருந்து விலகி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**